**செய்தி வெளியீடு எண்: 926** **நாள்: 17.12.2018**

**<u>செய்தி வெளியீடு</u>**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் இன்று (17.12.2018) தலைமைச் செயலகத்தில், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் கீழ் செயல்படும் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் மூலமாக கோயம்புத்தூர் – உக்கடம் பகுதி–1 திட்டப் பகுதியில் 80 கோடியே 54 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 1392 அடுக்குமாடி குடியிருப்புகள் மற்றும் கோயம்புத்தூர் – உக்கடம் பகுதி–2 திட்டப் பகுதியில் 13 கோடியே 88 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 448 அடுக்குமாடி குடியிருப்புகள் ஆகியவற்றை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாகத் திறந்து வைத்தார்கள். மேலும், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் மூலமாக கோயம்புத்தூர் மாவட்டம் – மதுக்கரை, திரு.வி.க. நகர் திட்டப் பகுதியில் 28 கோடியே 51 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 256 அடுக்குமாடி குடியிருப்புகள், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் மூலமாக 60 கோடியே 47 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அடுக்குமாடி குடியிருப்புகள் மற்றும் தனிவீடுகள் ஆகியவற்றை திறந்து வைத்தார்கள்.

மக்கள் தொகைப் பெருக்கம் மற்றும் நகர்ப்புற வளர்ச்சி ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, மக்களின் அத்தியாவசியத் தேவைகளில் முக்கியமான ஒன்றாக விளங்கும் உறைவிடத் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையிலும், குறிப்பாக, ஏழை, எளிய மக்கள் பயன்பெறும் நோக்கிலும், நகர்ப்புற பகுதிகளில் தேவைக்கேற்ப குடியிருப்புகள் கட்டுதல் மற்றும் வீட்டு வசதி உருவாக்குதல் போன்ற பல்வேறு திட்டங்களையும், தமிழகத்தின் நகர்ப்புற குடிசைப் பகுதிகளில் அடிப்படை வசதிகள் இன்றி வாழும் நலிவுற்ற ஏழை எளிய மக்களின் வாழ்வாதார நிலையினை மேம்படுத்தவும், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் மூலம் பல்வேறு குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டங்களை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் மூலமாக கோயம்புத்தூர் – உக்கடம் பகுதி–1 திட்டப் பகுதியில் 80 கோடியே 54 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 1392 அடுக்குமாடி குடியிருப்புகள் மற்றும் கோயம்புத்தூர் – உக்கடம் பகுதி–2 திட்டப் பகுதியில் 13 கோடியே 88 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 448 அடுக்குமாடி குடியிருப்புகள் ஆகியவற்றை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் இன்று காணொலிக் காட்சி மூலமாகத் திறந்து வைத்தார்கள். இந்த உக்கடம் திட்டப் பகுதியில் அடுக்குமாடி

குடியிருப்புகள் தரை மற்றும் மூன்று தளங்களுடன் கட்டப்பட்டுள்ளது. ஒவ்வொரு குடியிருப்பும் தலா 298 சதுர அடி பரப்பளவில், ஒரு பல்நோக்கு அறை, படுக்கையறை, கழிவறையுடன் கூடிய குளியலறை ஆகிய வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளது. மேலும், திட்டப் பகுதியில், தார் சாலை, தெரு விளக்கு வசதி, மழைநீர் வடிகால் வசதி, மழைநீர் சேகரிப்பு முறைகள், குடிநீர் வசதி, கீழ் மற்றும் மேல்நிலைத் தொட்டிகள், கழிவுநீரகற்று வசதி, குழந்தைகள் பூங்கா ஆகிய வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளது.

மேலும், கோயம்புத்தூர் மாவட்டம், மதுக்கரை – திரு.வி.க. நகர் திட்டப் பகுதியில். குடியிருப்பு ஒவ்வொன்றும் 298 முதல் 400 சதுர அடி வரை கட்டடப் பரப்பளவில் 28 கோடியே 51 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 256 அடுக்குமாடி குடியிருப்புகள்;

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் மூலம் சென்னை– தெற்காசிய கூட்டமைப்பு விளையாட்டு கிராமம், கோயம்பேடு திட்டப் பகுதியில், சுயநிதி திட்டத்தின் கீழ் 1.33 ஏக்கர் நிலப்பரப்பில் 51 கோடியே 54 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 136 உயர்வருவாய் பிரிவு பன்னடுக்கு மாடி குடியிருப்புகள்; மதுரை வடக்கு வட்டம், ஆனையூர் கிராமம், சிலையனேரியில் 3.99 ஏக்கர் நிலப்பரப்பில் 8 கோடியே 93 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 40 தனிவீடுகள்;

என மொத்தம், 183 கோடியே 40 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் மற்றும் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியக் குடியிருப்புகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் தலைவர் திரு.பி.கே. வைரமுத்து, தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர் திரு.ச.கிருஷ்ணன், இ.ஆ.ப., தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் திரு.எம்.எஸ். சண்முகம், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**